Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# The Thoughts of Female Companion in Natrinai Kurinji Thinai Songs

**Dr. M. Revathi,** Assistant Professor, Department of Tamil,
Shrimati Indira Gandhi College, Thiruchirappalli – 2, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-8633-8306
**DOI: 10.5281/zenodo.14752675**

## Abstract

*Literature reveals the lifestyle of the people. Their content and form change with time. Tamil books express the excellence and superiority of the Tamil language. Literature has been written and established in Tamil both before and after the ancient grammar book, "Tholkappiyam". Among them, the Sangam literature stands out. This literature reflects the culture, lifestyle and politics of the people of the Sangam period. Of the eight volumes of Sangam literature, five are classified as internal books, namely "Natrinai", "Kurunthokai", "Aingurunuru", "Akananooru" and "Kalithokai", while the five are classified as external books, namely "Patitruppattu" and "Purananooru", and the mixed book is "Paripadal". The book that is counted first in the eight volumes is "Natrinai". This book contains four hundred songs that represent good morals. A female friend is a bridge that connects both the leader and the heroine in life. Kurinjinilam Thozhi, who appears in the story, asks the beloved to marry the leader who refuses the day sign and the night sign. It can be seen that the leader has expressed his feelings as intrusive and non-committal. It can be seen that the female friend expresses her feelings from her heart if the daughter is away with the leader. This article traces the role of female companion in "Natrinai" Kurinji songs.*

**Keywords: Natrinai,** Kurinji thinai, Songs, Female Companion, Thoughts.

## References

[1] Ilampooranar. *Tholkaappiyam.* Saratha Pathippagam, 2010.
[2] Chandran, S. *Ilampuranar Kalaviyal Uraiyil Ilakkiya Saantrugal*. Pallavi Publishing House, Erode, 2017.
[3] Sarala Rajagopalan. Sanga Ilakkiyathil Thozhi. Photographic Publishing House, Chennai. 1986
[4] Shanmugam Pillai, M. (P.A). *Tholkappiyam, Porulathigaram Ilampuranam* - Part 2. Mullai Nilayam, Chennai, 2004.
[5] Narayanasamy Iyer, Pinnathur (U.A.). *Natrinai Moolamum Uraiyum*. Saiva Siddhanta Noorpathippu Kazhagam, Chennai, 1952.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# நற்றிணை குறிஞ்சித் திணைப்பாடல்களில் தோழியின் மனஉணர்வுகள்

**முனைவர் மெ. ரேவதி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 2, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-8633-8306
DOI: 10.5281/zenodo.14752675

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியங்கள் என்பன மக்களின் வாழ்க்கை முறையினை வெளிப்படுத்துவன. அவற்றின் பாடுபொருளும் வடிவமும் காலத்திற்கேற்ப மாற்றம்பெற்று வருவதுண்டு. தமிழ் மொழியின் சிறப்பையும் உயர்வையும் தமிழ்நூல்கள் பறைசாற்றுகின்றன. பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் முன்பும் பின்பும் இலக்கியங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டு நிலைபெற்றுள்ளன. அவற்றுள் சிறப்புபெற்று விளங்குவன சங்க இலக்கியங்களாகும். இவ்விலக்கியம் சங்ககால மக்களின் பண்பாடு, வாழ்வியல், அரசியல் போன்றவற்றை உணர்த்துகின்றது. சங்க இலக்கியமான எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை எனும் ஐந்தும் அகநூல்கள் என்றும் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறநூல்கள் என்றும் அகமும் புறமும் கலந்த நூல் பரிபாடல் என்றும் பகுக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகையில் முதலில் வைத்து எண்ணப்படும் நூல் நற்றிணையாகும். இந்நூல் நல்ல ஒழுகலாறுகளைக் குறிக்கும் நானூறு பாடல்களைக் கொண்டது.*

**குறிப்புச்சொற்கள்:** *நற்றிணை*, குறிஞ்சித் திணை, பாடல், தோழி, மனஉணர்வுகள்.

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை ஒழுக்கம் என்ற பொருளைக் குறிக்கும் ‘‘திணை‘‘ என்னும் சொல்லை அடைமொழியாகக் கொண்டுள்ளது. ஒன்பதடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டடி பேரெல்லையும் உடையது. நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூலைத் தொகுப்பித்தோன் பன்னாடு தந்த மாறன் வழுதி. தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. 175 புலவர்களால் பாடப்பட்ட இந்நூலில் 234 வது பாடல் கிடைக்கவில்லை. நற்றிணை நானூறு என்று அழைக்கப்படும் இந்நூலில் குறிஞ்சித் திணையில் இடம்பெறும் தோழியின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தோழி**

தோழியைப் பாங்கி என்றும் அழைப்பர். தோழி, தலைவியோடு ஒன்றாக வாழும் உரிமை பெற்று எப்போதும் அருகில் இருப்பவர். தோழியைத், **தோழி தானே செவிலியது**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


**மகளே (தொல்.,பொருள். ப. 90)** என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து தோழி செவிலியின் மகள் என்பது புலப்படுகின்றது. சரளா ராசகோபாலன், தோழி என்பவள் வெற்றியன்றித் தோல்வியே அறியாத விந்தைப் பிறவி (சரளாராசகோபாலன். ப. 8) என்றும், தோழி கூலிக்கு அமர்த்தப்படுகின்ற வேலைக்காரி போன்ற பாங்கியல்ல. பெரும்பாலும் எல்லா வகையாலும் தலைவியினையொத்த, அவளுக்குச் சமமான உயிர்த் தோழியாவாள் (சரளாராச கோபாலன். ப. 7) என்றும் கூறுகின்றார். களவு வாழ்க்கையில் தலைவன், தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகத் திகழ்பவள் தோழி (செ. சந்திரன். ப.74) என்று செ. சந்திரன் குறிப்பிடுகின்றார். இப்பண்பினைக் கொண்ட நற்றிணையில் இடம்பெறும் குறிஞ்சிநிலத் தோழி தலைவன், தலைவி, செவிலி, தெய்வம், நெஞ்சம் போன்றோரிடம் எண்பத்தேழு பாடல்களில் கூற்று நிகழ்த்துகிறாள்.

**தலைவனிடம் பேசுதல்**

தோழி தலைவனிடம் பகற்குறி மறுத்தும் இரவுக்குறி மறுத்தும் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறும் பத்தொன்பது பாடல்களில் பேசுகின்றாள்.

**நன்றி விளையும் தீதொடுவரும் என**
**அன்றுநற்கு அறிந்தனள் ஆயின் குன்றத்துத்**
**தேம்முதிர் சிலம்பின் தடைஇய**
**வேய்மருள் பணைத்தோள் அழியலள் மன்னே (நற்., 188., 6-9)**

என்ற பாடலடிகளின் மூலம், ஒரு காலத்தில் நன்மையாக வரும் காரியம் மற்றொரு காலத்தில் தீதாக முடியும் என்பதை இயற்கைப் புணர்ச்சியில் தலைவி அறிந்துவிட்டாள். அவளைத் திருமணம் செய்யாவிடில் அவளருகில் வர வேண்டாம் என்று கூறி தோழி தலைவனுக்குப் பகற்குறி மறுத்ததை அறிய முடிகின்றது. மற்றொரு பாடலில், உன்னால் தலைவிக்கு ஏற்படும் துயரத்தை எண்ணிப் பார்க்காமல், பாம்புகள் நடமாடும் இரவுப் பொழுதில் தலைவியைக் காணவருதல் உனக்குத் தகுதியுடையதன்று என்று கூறி தோழி தலைவனுக்கு இரவுக்குறி மறுத்ததை,

**நன்மலை நாட பண்பு எனப்படுமோ**
**நின்நயந்து உறைவிஇன் உயிர் உள்ளாய்**
**அணங்குடை அரவின் ஆர்இருள் நடுநாள்**
**மைபடு சிறுநெறி எஃகுது ணையாக**
**ஆரம் கமழும் மார்பினை**
**சாரல் சிறுகுடி ஈங்கு நீவரலே (நற்., 168. 6-11)**

என்ற பாடலடிகளின் மூலம் உணர முடிகின்றது. இதன் மூலம் தோழி தலைவனிடம் தலைவியை விரைந்து திருமணம் செய்து கொள்ளும் வகையில் இருவகை குறிகளிலும் மறுத்துப் பேசியதை அறிய முடிகின்றது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**தலைவிடம் பேசுதல்**

தலைவன் வரைவு மேற்கொள்ள வந்த பொழுதும், ஆறுபார்த்துற்ற அச்சத்தாலும், குறைநயப்பித்தும், இரவுக்குறி நேர்ந்தும் தலைவியிடம் இருபத்தெட்டு பாடல்களில் பேசுகின்றதைப் பின்வரும் வகையில் காணலாம்.

**உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கும்**
**இரவின் அஞ்சாய் அஞ்சுவல் அரவின்**
**ஈர்அளைப் புற்றம் கார்என முற்றி**
**இரைதேர் எண்கினம் அகழும்**
**வரைசேர் சிறுநெறி வாரா தீமே. (நற்., 336. 7-11)**

என்ற பாடலடிகளின் மூலம், தோழி தலைவியிடம் தலைவன் உன்னை இரவில் காணவரும் வழியில் யானை புலியின் வருகையை எதிர்பார்த்து நிற்கும், பாம்பு புற்றில் இரை தேட வந்த கரடியின் கூட்டங்கள் குடைந்து எடுக்கும். ஆகையால் தலைவன் வரும் வழியின் ஏதத்தைக் கூறி வராமல் தடுக்க வேண்டும் என்று கூறியதைக் காணமுடிகிறது.

**வரைய வந்தவாய்மைக்கு ஏற்ப**
**நமர் கொடை நேர்ந்தனர் ஆயின் அவருடன்**
**நேர்வர கொல் வாழி தோழி நம்காதலர்**
**புதுவர் ஆகிய வரவும் நின்**
**வதுவை நாணொடுக்கமும் காணுங்காலே (நற்., 393. 9-13)**

என்ற பாடலடிகளின் மூலம், தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வருவதைக் கண்ட தலைவன் தோழி தலைவியிடம் சொல்லியதை உணரலாம். மேலும்,

**உடுக்கும் தழை தந்தனனே அவைதாம்**
**உடுப்பின்யாய் அஞ்சுதுமே ஆயிடை**
**கேளுடைக் கேடு அஞ்சுதுமே ஆயிடை**
**வாடல கொல்லோ தாமே அவன்மலைப்**
**போருடை வருடையும் பாயாச்**
**சூருடை அடுக்கத்த கொயற்கு அரும்தழையே (நற்., 359. 4-9)**

என்ற பாடலடிகளின் மூலம், தோழி தலைவியிடம், தலைவன் தரும் தழையை ஏற்பின் தாய்க்கு அஞ்சுவேன், கொடுப்பின் தலைவன் ஆற்றமைக்கு அஞ்சுவேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறி தலைவியின் குறிப்பினை அறிய முற்பட்டதை உணரலாம்.

**தலைவன் தலைவியிடம்பேசுதல்**

தலைவன் தலைவி இருவரிடமும் இயற்பழித்தல், செறிப்பறிவுறுத்தல், வரைவுகடாதல், சிறைப்புறக் கூற்று என்ற துறைகளின் கீழ் முப்பத்தேழு பாடல்களில் தோழி பேசுகிறாள். தலைவன் சிறைப்புறமிருக்கக் காணாத போல் தோழி தலைவியிடம், திருமணம் செய்து

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
Pandian Journal Of Women's Studies
*We are New Women*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கொள்ளாமல் காலம் தாழ்த்தும் தலைவன் சான்றோன் இல்லை. அவன் ஊர் எவ்விடத்தில் உள்ளதென்று கேட்டு வருவோம் என்று தலைவனை இயற்பழித்து வரைவுகடாயதை, "**வான்தோய் மாமலை நாடனைச் / சான்றோய் அல்லை என்றனம் வரற்கே (நற்., 365. 8-9)** என்ற நற்றினைப் பாடலடிகளின் வழி அறியலாம்.

**சிறுகிளி கடிதல் பிறக்கி யாவணதோ...**

**...செறிதோட்டு எல்வளைக் குறுமகள்**

**சிறுபுனத்து அல்கிய பெரும்புற நிலையே (நற்., 306. 8-9)**

இப்பாடலடிகளின் மூலம், தினை முற்றியதால் தலைவி இற்செறிக்கப்படுவாள். ஆகையால் தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தோழி தலைவனிடம் பேசியதை அறிய முடிகிறது.

**செவிலியிடம் பேசுதல்**

செவிலி, தலைவிக்கு அணங்கு தீண்டியதால் வெறியாட்டு வைப்பதனைக் கண்ட தோழி, தலைவியைத் தினைப்புனம் காக்க அனுப்பி வைத்தால் இழந்த நலனை மீண்டும் பெறுவாள் என்று செவிலியிடம் கூறியதை,

**களிற்றுத் துப்பு அஞ்சாப் புலியதள் இதணத்துச்**

**சிறுதினை வியன்புனம் காப்பின்**

**பெருகுவள் மன்னோ என்தோழி தன் நலனே (நற்., 351. 5-9)**

என்ற பாடலடிகளின் மூலம் காண முடிகின்றது.

**நெஞ்சிடம் பேசுதல்**

தலைவி மீது பேரன்புடையவள் தாய். தலைவனுடன் தலைவியை அனுப்பி வைத்தால் தாய்படும் துன்பம் பெரியதாகும். நான் என்ன செய்வேன் என்று தோழி கூறினாள். இதனை,

**பாவை அன்ன வனப்பினள் இவௌனக்**

**காமர் நெஞ்சமொடு பல்பாராட்டி**

**யாய்மறப்பு அறியா மடந்தை**

**தேம்மறப்பு அறியாக் கமழ் கூந்தலளே (நற்., 301. 6-9)**

என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

**முருகனிடம் பேசுதல்**

தோழி முருகனிடம் தலைவியைத் தலைவனோடு விரைவில் திருமணம் செய்து விட்டால் தலைவியின் நோய் நீங்கும் என்று குறிப்பினால் வெறிவிலக்கியதை,

**பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்**

**அருவி இன்னியத்தாடு நாடன்**

**மார்புதர வந்த படர்மலி அருநோய்**

**நின்னணங்கு அன்மை அறிந்தும் அண்ணாந்து**

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



**கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி**
**வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்**
**கடவுள் ஆயினும் ஆக**
**மடவை மன்ற வாழிய முருகே (நற்., 34. 4-11)**

எனும் பாடலடிகள் விளக்குகின்றது.

**முடிவுரை**

களவு வாழ்க்கையில் தலைவன், தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகத் திகழ்பவள் தோழி. நற்றிணையில் இடம்பெறும் குறிஞ்சிநிலத் தோழி தலைவன், தலைவி, செவிலி, தெய்வம், நெஞ்சம் போன்றோரிடம் எண்பத்தேழு பாடல்களில் கூற்று நிகழ்த்துகிறாள். தோழி தலைவனிடம் பகற்குறி மறுத்தும் இரவுக்குறி மறுத்தும் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறும், தலைவன் வரைவு மேற்கொள்ள வந்த பொழுதும், ஆறு பார்த்துற்ற அச்சத்தாலும், குறைநயப் பித்தும், இரவுக்குறி நேர்ந்தும் தலைவியிடம் பேசியதையும், தலைவன் தலைவி இருவரிடமும் இயற்பழித்தல், செறிப்பறிவுறுத்தல், வரைவு கடாதல் போன்ற சூழலிலும் தன் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. தலைவனுடன் தலைவியை அனுப்பி வைத்தால் தாய்படும் துன்பம் பெரியதாகும் என்று தன் நெஞ்சிடமும், முருகனிடம் தலைவியைத் தலைவனோடு விரைவில் திருமணம் செய்துவிட்டால் தலைவியின் நோய் நீங்கும் என்றும் தன் மனவுணர்வுகளை தோழி வெளிப்படுத்தியதைக் காணமுடிகின்றது.

**குறிப்புகள்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம்*, சாரதா பதிப்பகம், 2010.

[2] சந்திரன், செ. *இளம்பூரணர் களவியல் உரையில் இலக்கியச் சான்றுகள்.* பல்லவி பதிப்பகம், ஈரோடு, 2017.

[3] சரளா ராசகோபாலன். *சங்க இலக்கியத்தில் தோழி.* ஒளிப் பதிப்பகம், சென்னை. 1986.

[4] சண்முகம் பிள்ளை, மு. (ப.ஆ). *தொல்காப்பியம் - பொருளதிகாரம். இளம்பூரணம்* - பகுதி 2, முல்லை நிலையம், சென்னை, 2004.

[5] நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் (உ. ஆ.). *நற்றிணை மூலமும் உரையும்*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.